# முதல் இடைப்பருவத் தேர்வு - 2018

## மேனிலை முதலாமாண்டு (XI)

காலம் : 1–30 மணி | **பொதுத்தமிழ்** | மதிப்பெண்கள் : 50

**(செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழிப்பயிற்சி)**

I. <u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி</u> (10x1=10)

1) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) பவணந்தி முனிவர் – நன்னூல் ஆ) அ.முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்

இ) இந்திரன் – பேச்சு மொழியும், எழுத்து மொழியும் ஈ) சு.வில்வரத்தினம் – ஆறாம் திணை

(i) அ, ஆ (ii) அ, ஈ (iii) அ, இ (iv) ஆ, இ

2) அடிமோனையைத் தெரிவு செய்து எழுதுக.

எழுதத்தான் வேண்டும்

எழுகின்ற யுகத்தினோர் பாடலை

3) பாயிரம் இல்லது ________ அன்றே.

அ) காவியம் ஆ) பாடல் இ) கவிதை ஈ) பனுவல்

4) தவறான இணையைத் தேர்வு செய்க

அ) மொழி + ஆளுமை – உயிர், உயிர் ஆ) தமிழ் + உணர்வு – மெய், உயிர்

இ) கடல் + அலை – உயிர், மெய் ஈ) மண் + வளம் – மெய், மெய்

5) பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக (ஒன்று மட்டும்)

அ) அலர்ந்து ஆ) வைத்தார்

6) இலக்கணக் குறிப்பெழுதுக (ஒன்று மட்டும்)

அ) ஐந்தும் ஆ) வெண்சங்கு

7) புணர்ச்சி விதி எழுதுக (ஒன்று மட்டும்)

அ) பொதுச்சிறப்பு ஆ) செங்கயல்

8) ஸ்டெஃபான் மல்லார்மே பிறந்த நாடு

அ) தென் அமெரிக்காவின் சிலி ஆ) அமெரிக்கா இ) பிரான்சு ஈ) இந்தியா

9) புலம் பெயர்ந்த மக்களின் நிலம் ________ ஆகும்.

10) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்

அ) 22 ஆ) 24 இ) 20 ஈ) 3

I. <u>எவையேனும் நான்கு குறுவினாக்களுக்கு விடையளிக்க.</u> (4x2=8)

11) பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாடு சக்தி மிகுந்தது ஏன்?

12) தமிழ் நாட்டின் மாநில மரம் பற்றி குறிப்பெழுதுக.

13) பாயிரம் பற்றி நீ அறியும் கருத்து யாது?

14) ஏதிலியாய்க்குருவிகள் எங்கோ போயின – இத்தொடர் பற்றி உன் கருத்து என்ன?

15) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

16) உயிரீறு, மெய்யீறு – விளக்குக.

III. <u>எவையேனும் நான்கு சிறுவினாக்களுக்கு விடையளிக்க.</u> *(4x4=16)*

17) நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?

18) சு.வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகின்றது ?

19) பாப்லோ நெரூடா பற்றி நீ அறிந்தவை யாவை ?

20) இனவெழுத்துக்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

21) "வா" என்னும் வேர்ச்சொல்லைக் கொண்டு **வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்று, வினையாலணையும்** தொடர்களமைக்க.

22) வேதிக்கலப்பில்லாத **பூச்சிக்கொல்லி** நடைமுறைக்கு சாத்தியமா என்பது பற்றிய உன் கருத்தை எழுதுக.

IV. <u>கீழ்வருவனவற்றில் எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க.</u> *(1x6=6)*

23) பாயிரத்தின் ஏழு பெயர்களையும், பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் பற்றி விளக்குக.

அல்லது

24) சுற்றுச்சுழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்பது பற்றி உன் கருத்துக்களைப் பதினைந்து வரிகளில் பதிவு செய்க.

V. <u>கீழ்வரும் மனனப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.</u> *(1x4=4)*

25) "ஏடு தொடக்கி" எனத் தொடங்கி யுகத்தினோர் பாடலை" என முடியும் செய்யுள்

VI. <u>பின்வரும் விரிவான துணைப்பாடக் கதை வினாக்களில் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க.</u> *(1x6=6)*

26) தமிழர் வாழ்வோடும், புலம் பெயர் நிகழ்வுகளோடும்

அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

அல்லது

"யானை டாக்டர்" கதை வாயிலாக நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்தெழுதுக ?

தமிழே! உனக்கும் எனக்கும்
தாய்பிள்ளை உறவம்மா!
நன்னிலை உனக்கென்றால்
எனக்கும் தானே!
– பாரதிதாசன்

*******************